கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 13.12.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
## பிவிசிஸ்ட் (PVSyst) மூலம் மென் பொருள் சூரியமின் சாதனங்கள் வடிவமைப்பு பயிற்சி

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மாணவர்களுக்கும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கும், ***"பிவிசிஸ்ட் (PVSyst) மென்பொருள் வடிவமைப்பு"*** என்ற திறனுக்கான பயிற்சியை 07.12.2024 முதல் 08.12.2024 வரை நடத்தினர். முனைவர். அ.ரவிராஜ், முதன்மையர், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர் PVSyst மென் பொருளின் மூலம் சூரிய அமைப்புகளை வடிவமைப்பதில் திறன் மேம்பாட்டு குறித்த முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இந்த மென் பொருள் சூரிய ஆற்றல், உற்பத்தி கணக்கீடு, ஆற்றல் இழப்பு மதிப்பீட்டை கற்றுக் கொள்ளவும், சூரிய பயன்பாட்டு கட்டத்துடன் இணைக்கப்பட்ட ஆன்கிரிட் (on–grid), இணைக்கப்படாத ஆப்கிரிட் (off–grid) மற்றும் சூரியநீர் இறைப்பான் அமைப்பின் சிறந்த வடிவமைப்பிற்கு வழிவகுக்கிறது. மேலும் தொழில்துறைகளில் வேலைவாய்ப்புகளுக்கான ஒரு தூண்டு கோலாக இந்த திறன் பயிற்சி விளங்குகிறது.

தொழில் நுட்ப நிபுணரும் UL Solutions, பெங்களூரு நிறுவனத்தின் திட்ட மேலாளருமான பொறியாளர். சௌமியா சுப்பிரமணியம் PVSyst வடிவமைப்பின் பாடங்களை எடுத்துரைத்து, அதன் செயல் விளக்கங்களை மென் பொருள் மூலம் பயிற்சியாளர்களுக்கு விளக்கினார். பங்கேற்பாளர்கள் PVSyst மென் பொருளில் சக்தி அமைப்புகள், மாதிரிகள், படிப்படியாக திட்ட வடிவமைப்பு மற்றும் அறிக்கைகள் உருவாக்குவதில் செயல்முறையுடன் அமர்வில் ஈடுபட்டனர். புதுப்பிக்கத்தக்க ஆற்றல்பொறியியல் துறையின் பேராசிரியர், முனைவர். R. மகேந்திரன் சூரியநீர் அமைப்பின் செயல்முறை வடிவமைப்பை மென் பொருள் மூலம் கையாண்டார். பங்கேற்பாளர்களுக்கு பயிற்சிக்கு தொடர்பான மென்பொருள் குறிப்புரை தனிமுறைப் பணிகளை முடித்த பயிற்சியாளர்களுக்கு முதன்மையர் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

முனைவர். பாலாஜிகண்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர் (SWCE), முனைவர். C. S. சுமதி, பேராசிரியர் (Comp.Sci), ஆகியோர் இந்த பயிற்சியை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தி கொடுத்தனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***